★ தமிழ் நாட்டில் எடுக்கப்படும் பொலிஸ் நடவடிக்கை

# தமிழ்ப் போராளிகளைக் கட்டுப்படுத்தவேயன்றி அவர்களைக் கைது செய்யவல்ல - கருணாநிதி

தமிழ் நாட்டில் நேற்று மாற்று தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த பலர் கைது செய்யப் பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

சென்னை, செங்கை அண்ணா, சேலம், இராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் கைது செய்யப்பட்ட 86 பேரில் 29 பேர் ஈ. பி. ஆர். எல். எப் இயக் கத்தைச் சேர்ந்தவர்கள்.

ஈ. என். டி. எல் எப். இயக்கத்தினர் 22 பேரும், புளட் இயக்கத்தினரில் ஒருவரும், ஈறோஸ் இயக்கத்தினரில் ஒருவரும் மற்றும் ரெலோ இயக்கத்தின் இருபிரிவுகளை யும் சேர்ந்த 16 பேரும் கைது செய்யப் பட்டனர்.

திருச்சியில் 10 பேர் கைதுசெய்யப்பட்ட னர். இவர்களில் நால்வர் புளட் இயக்கத் தையும், அறுவர் ரெலோ இயக்கத்தை யும் சேர்ந்தவர்களாவர்.

திருச்சியில் கைதான புளட் உறுப்பினர் கள் நால்வரும் திருச்சி வங்கியொன்றில் பணம் வைப்பிலிடவந்த ஒருவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கடந்த ஒரு வருடகாலமாக சிறைவைக்கப்பட்டி ருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 81 பேரும் தனியான ஓர் இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

கடந்த இரு தினங்களாக தமிழ் போராளி கள் கைதுசெய்யப்பட்டது தொடர்பாக நேற்று கருத்துவெளியிட்ட தமிழக முதல மைச்சர் மு. கருணாநிதி "தற்போதைய நடவடிக்கை போராளிகளின் நடமாட் டத்தை கட்டுப்படுத்தவே எடுக்கப்படுகிறது. எந்த போராளியும் கைது செய்யப்பட வில்லை; இவர்கள் சுற்றி வளைக்கப்பட்டு விடுதிகளிலும் பொலிஸ் மாணவர் விடுதி களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர் களுக்கான சகல வசதியும் அளிக்கப்படு கிறது" என்றார். தமிழகத்தில் இருந்துஎந்த ஆயுதமும் இலங்கைக்கு கடத்திச்செல்லப்பட வில்லை எனவும் முதலமைச்சர் மு. கருணா நிதி குறிப்பிட்டார்

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 19 பிரமோதூத கார்த்திகை 30 (16-12-1990) ஞாயிறு

## வளைகுடாப் போரால் ஏற்படும் இழப்பு 6.5 பில்லியன் ரூபா எனக் கணிப்பு

வளைகுடா நிலைமை களையடுத்து இவ்வாண்டு இலங்கையின் பொருளாதா ரம் 6.5 பில்லியன் ரூபா வினால் பாதிக்கப் படும்என பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை பாதுகாப்பு செலவீனம் 20 பில்லியனால் அதிகரிக்கும் எனவும் தெரி விக்கப்படுகிறது. இலங்கை யின் 1 கோடியே 70 லட்சம் சனத்தொகையில் 10லட்சம் பேர் அகதிகளாக இருப்ப தாகவும் அவர்களுக்காக 2 பில்லியன் ரூபாவுக்குமேல் செலவிடப்படுவதாகவும் திட்டமிடல் அமைச்சு தெரி வித்துள்ளது

வளைகுடா போரினால் ஈராக்கிலும் குவைத்திலிருந் தும் தொழில் புரியும் இலங் கையர்கள் மூலம் கிடைத்த வருமானம் 3.5 பில்லியன் ரூபாவினால் வீழ்ச்சியடைந் துள்ளது.

ஈராக்கிற்கான தேயிலை ஏற்றுமதி மீது விதிக்கப் பட்ட பொருளாதாரத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# மக்கள் அவலங்களை உணராதவர்கள் ஆட்சி நடாத்துகிறார்கள்

## 'மொழி, தரப்படுத்தல் காரணமாக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்'

**பண்டாரநாயக்காவின் மொழிக் கொள்கையாலும், தரப்படுத்த லாலும் புறக்கணிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களே ஆயுதம் ஏந்தி னார்கள். இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் நீதி யமைச்சின் செயலாளராக பணிபுரிந்த நிகால் ஜெயவிக்கிரம தெரி வித்துள்ளார். இவர் தற்பொழுது ஹொங்கொங் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.**

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் குறித்து சிஙப்பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவரது கட்டுரை வெளி யானதையடுத்து ஐ. நாவில் இலங்கையின் நிரந்தரப் பிரதி நிதியான தயா பெரேரா அவருக்கு கடிதம் ஒன்று எழுதி னார். எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா நிகாலின்கட்டுரையையும்தூது வரின் கடிதத்தையும் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்தார்.

உயர்கல்விவாய்ப்பும், வேலை வாய்ப்பும் மறுக்கப்பட்டமை

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவில் ஷெல் வீச்சு

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தினமும் இரவு பத்து மணிக்குப் பின்னர் அடிக்கடி ஷெல் வீச்சு இடம் பெறுகிறது.

இதனால் இப் பகுதியை அடுத்துள்ள கிராம மக்கள் இடம் பெயர்ந்து வருகின்ற னர். (ப 3)

பிரதமர் சந்திரசேகர் குற்றச்சாட்டு

## மத்திய அரசை தமிழகம் கலந்தாலோசிப்பதில்லை!

இந்தியாவின் தேசியப் பிரச் சினைகளுக்கு தமிழக அரசு, மத்திய அரசின் ஆலோசனைப் படியேநடந்து கொள்ள வேண் டும் என பிரதமர் சந்திரசேகர் எச்சரித்துள்ளார்.

லக்னோவில் நேற்று நடை பெற்ற ஜனதாதள் (எஸ்) கட்சியின் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

முக்கிய பிரச்சினைகளை தமிழகம் மத்திய அரசுடன் கலந்து ஆலோசிப்பது இல்லை தமிழகம் இவ்வாறு தன்னிச் சையாக செயற்பட முடியாது. சென்னையில் இருந்து மத்திய அரசிற்கு கட்டளைகள் சென்ற காலம் முடிந்து விட்டது எனக்குறிப்பிட்ட பிரதமர் சந்திரசேகர், இது தமிழகத் தின் மீது மத்திய அரசு நட வடிக்கை எடுக்கும் என்பதை காட்டக் கூறவில்லை என வும் சொன்னார்.

பிரதமர் சந்திரசேகரின் இக் குற்றச்சாட்டை தமிழக

—04 ஆம் பக்கம் பார்க்க

## மாகாணசபை நிதிஒதுக்கீடு விவாதம்

# பாராளுமன்றத்தில் நேற்று

மனித உரிமைகள் குறித்து சிலைப்பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவரது கட்டுரை வெளி இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான தயா பெரேரா அவருக்கு கடிதம் ஒன்று எழுதினார். எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா வானை கடிதத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

உயர்கல்விவாய்ப்பும்,வேலை வாய்ப்பும் மறுக்கப்பட்டமை

—04 ஆம் பக்கம் பார்க்க

வட்டுக்கோட்டை, சுண்டிக்குளம், பரந்தன்

# பொம்மர், ஹெலி தாக்குதல் மூவர் காயமடைந்தனர்

வட்டுக்கோடடை, கொட்டைக்காடு என்ற இடத்தில் நேற்று மாலை 5-30 மணியளவில் இரு பொம்மர்கள் இரு குண்டுகளை வீசின, அவை வீதியில் விழுந்து வெடித்ததால் வீதியால் சென்றுகொண்டிருந்த ரீ. சிவகுமாரி (22) படுகாயமடைந்தார்.

சுண்டிக்குளத்திலும் கடற்கரைப் பகுதியில் நேற்று மூன்தினம் காலை 10 மணியளவில் பொம்மர்கள் மூன்று குண்டுகளை வீசின.

பரந்தனில் நேற்று மாலை

—04 ஆம் பக்கம் பார்க்க

சுகாதார அமைச்சு தகவல்

# ராணுவ ஆஸ்பத்திரியில் பணிபுரிய டாக்டர்கள் அஞ்சுகிறார்கள்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக படுகாயமடையும் படையினருக்கு உடனடி சிகிச்சையளிக்க போதிய டாக்டர்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

இதனால் படையினரில் பலர் வைத்திய வசதிகள் இன்றி உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை இராணுவ வைத்தியசாலையில் ஒரே ஒரு வைத்திய நிபுணரே பணிபுரிகிறார்,

வவுனியா, புத்தளம் இராணுவ ஆஸ்பத்திரிகளில் ஒரு வைத்திய நிபுணரும் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

சுகாதாரத் திணைக்களத்திடம் இது குறித்து இராணுவத் தலைமையகம் கேட்டதற்கு இராணுவ ஆஸ்பத்திரி

— 4 ஆம் பக்கம் பார்க்க

# பாராளுமன்றத்தில் நேற்று ஆளும்கட்சி, எதிர்க்கட்சி கைகலப்பு

மாகாண சபைகளுக்கான நிதிஒதுக்கீட்டு விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் பெரும் கைகலப்பில் முடிந்தது.

விவாதம் முடிவடைந்து தீர்மானம் வாக்களிப்பிற்கு விடுவதற்கு ஆயத்தமாகும் வேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வாக்கொடுப்பு குறித்து கடும் ஆட்சேபம் தெரிவித்து மாகாண சபை முறைகளுக்கு எதிராகவும் அரசிற்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினருக்கும் ஆளும் கட்சியினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்படடது இதனால் நிதி ஒதுக்கீட்டிற்கான வாக்களிப்பை ஒத்திவைப்பதாக கூறி உப சபாநாயகர் சபையைக் கலையுமாறு உத்தரவிட்டார்.

பாராளுமன்றத்தில் கூட்டணி எம். பி. நவரத்தினம்:

# ஒருபோதும் புலிகளை வெல்ல முடியாது வடக்கே பற்றரி அனுப்பப் பயப்படுகிறீர்கள்!

வடக்கில் நீங்கள் ஒருபோதும் புலிகளை வெல்லப்போவதில்லை. மாறாக அப்பாவிப் படை வீரர்களை அநியாயமாகப் பலியிடாதீர்கள். மாங்குளத்தில் நடந்தது இது தான். புலிகளை வெல்ல முடியாவிடில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுங்கள்.

இவ்வாறு கூட்டணி எம் பி திரு.கே நவரத்தினம் பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

இரண்டு பற்றரிகளைக் கூட யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது. அரசு இவ்வளவு தூரம் பயப்படுகிறது. யுத்தத்தைத் தொடர முடியாவிடில் புலிகளுடன் பேசித் தீர்வு காணுங்கள்.

—04 ஆம் பக்கம் பார்க்க

# மகாவலி டீ வலயத்தில் மூவர் சுட்டுக் கொலை

மகாவலி டீ வலயத்தில் உள்ள சிங்கபுர பகுதியில் ஜீப்பில் பிரயாணம் செய்த மூவர் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது

சிங்கபுர இராணுவ முகாமுக்கு சமீபமாகவே இச்சம்பவம் நடந்துள்ளது

ஜீப்பை கண்ணிவெடியில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## காலிமுகத்திடலில் யாழ்ப்பாணப் பூவரசு

யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற மரமான பூவரசு கொழும்பில் நடப்படுகின்றது.

கொழும்பு-காலி வீதி, கோல் பேஸ் பகுதியில் பூவரசு மரம் நடப்பட்டுள்ளது.

அழகிற்கும், நிழலுக்குமாகவே இவை நடப்படுவதாகத் தெரிகின்றது. (11)

# வடபகுதி உணவுக் கப்பல் சேவையை இம்மாத இறுதியுடன் நிறுத்த முயற்சி!

வடபகுதிக்கான உணவுக கப்பல் சேவையை இம்மாத இறுதியுடன் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

தற்பொழுது கொழும்பு, திருகோணமலைத்துறைமுகங்களிலிருந்து பருத்தித்துறைக்கு இந்த உணவுக்கப்பல்சேவை நடைபெற்று வருகின்றது.

'லங்கா சிறி', 'குமண', 'விங்கோ ரேடர்'ஆகிய மூன்று தனிப்பட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான கப்பல்களே இந்த சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

தற்பொழுது கடல் கொந்தளிப்பு காரணமாக இக்கப்பல்களில் கொண்டுவரும் உணவுப் பொருட்களை இழுவைப்படகுகளில் கரைக்கு கொண்டு வருவதில் பெரும் சிரமம் எதிர் நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வீண்தாமதமும், சிரமமும் ஏற்படுவதாக மேற்படி கப்பல் நிறுவனங்கள் முறையிட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் வடபகுதி கடல்பகுதியில் காலநிலை மிகவும் மோசமாக இருக்கும் என மதிப்பிடப்படுவதினால் துறைமுக மேடை வசதியற்ற பருத்தித்துறை, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு கப்பல் சேவைகளை நடாத்த முடியாது இருக்குமெனவும் சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனங்கள் தெரிவித்துள்ளனவாம்.

சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'லங்கா சிறி' கப்பலில் இருந்து பொருட்களை இறக்குவது கடல் கொந்தளிப்பு காரணமாக தாமதப்பட்டதும், இறக்குமதி வேலையின்போது இழுவைபபடகு ஒன்று கடல் கொந்தளிப்பினால் மோதப்பட்டு சேதமடைந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப. 11, 74)

## படுவான்கரை காட்டில் பாம்புதீண்டி 10 அகதிகள் பலி!

பாம்புகள் தீண்டியதனால் வைத்திய வசதிகள் எதுவுமின்றி காடுகளில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளில் 10 பேர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளார்கள்.

மட்டக்களப்பு வாவிக்கு மேற்கேயுள்ள படுவான்கரைப் பிரதேசத்தில் இச்சம்பவம் நடந்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

எதுவித விசாரணைகளுமின்றி இந்த 10 சடலங்கள் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (11)

## 10 வீடமைப்பு அலுவலர்கள் வேலைப்பரிசோதகர்களாக நியமனம்

யாழ் மாவட்டத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றிய பத்து வீடமைப்பு உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக (உப-வேலைப் பரிசோதகர்கள்) பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையிலேயே இவர்கள் பதவி உயர்த்தப்பட்டுள்ளனரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12103

### தவறிவிட்டது

மீசாலைக்கும் நுணாவிலுக்கும் இடையில் உள்ள (பிரதான றோட்டில்) சுப்பிரமணியதேசிகர்பால சுப்பிரமணிய தேசிகர் அடையாள அட்டை (261880722V) மணிபேர்ஸ், பணம், சில்லறைப் பொருட்கள் அடங்கிய பை ஒன்று விழுந்துவிட்டது. எடுத்தவர்கள் ஆ. சுப்பிரமணியம் ஆசிரியர், வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில், மீசாலை என்ற விலாசத்தில் ஒப்படைத்துச் சன்மானம் பெறவும். 12104

## பெற்றோல் விலை குறைப்பு

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகள் அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து குறைக்கப்படவுள்ளன.

தற்பொழுது ஒரு லீற்றர் 35 ரூபாவாக விற்கப்படும் பெற்றோல் 30 ரூபாவாகவும், டீசல் ஒரு லீற்றர் 13 ரூபாவிலிருந்து 11 ரூபாவாகவும் குறைக்கப்படவுள்ளன.

## உங்களால் உதவ முடியுமா?

மூதூர், கட்டைபறிச்சானைச் சேர்ந்த சித்திரவேல் மாசிலாமணி (70) என்னும் வயோதிபர் திருகோணமலை வைத்தியசாலைக்கு வந்த வேளை அங்கு ஏற்பட்ட வன்செயல் காரணமாக அகதியாகி இடம்பெயர்ந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அகதி முகாமில் தங்கி உள்ளார்.

வயோதிப வயதில் அல்லலுறும் இவர் தனது பிள்ளைகளான மா. யோகராணி, மா. லோகேஸ்வரி, மா. நாகேஸ்வரன், மா. சண்முகநாதன் ஆகியோரைத் தேடுகின்றார்.

இதேசமயம் யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக இருக்கும் பண்டிதர் தனசிங்கத்தைத் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறும்கேட்டுள்ளார் (ப-10

## காட்டு யானைகள் அட்டகாசம் சைக்கிள்வியாபாரி அடித்துக் கொலை

வன்னேரிக்குளம், பூநகரி, பல்லவராயன் கட்டு. வலைம்பாட்டுப்பகுதிகளில், யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் வவுனியாவிலிருந்து இக்காட்டுப் பாதை வழியாக வரும் சைக்கிள் வியாபாரிகள் பெரும் அச்சத்துக்கும், அபாயத்துக்கும் நடுவே பயணத்தைத் தொடர வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் பல்லவரா்யன் கட்டு- வலைப்பாட்டுச்சந்திப் பகுதியில் சைக்கிள்வியாபாரி ஒருவர் காட்டுயானையால் அடித்துக் கொல்லப்பட்டார், (ப 32)

## கைலாசபதி நினைவுக் கூட்டம்

அமரர் க. கைலாசபதியின் 8-வது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 16-ம்திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம்(நந்தி) தலைமையில் நடைபெறவுள்ளது.

கவிஞர் இ முருகையன் இந் நிகழ்ச்சியில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## சென்னையில் 'கப்டன் பிரபாகரன்'

சென்னையில் 'கப்டன் பிரபாகரன்' என்ற பெயரில் தமிழ்த் திரைப்படமொன்று வேகமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இப்படத்தின் படப்பிடிப்பு கேரளக் காட்டுப் பகுதியில் நடக்கிறது. இதில் ஆயிரம் துணை நடிகர்கள் நடிக்கிறார்கள்.

சாலக்குடி நீர்வீழ்ச்சி, வாழச்சுகால் நீர்வீழ்ச்சி பகுதிகளில் பெரும் பணச் செலவில் வெளிப்புறப் படப்பிடிப்பு தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.

## வல்லிபுர ஆலயத்தில் மார்கழிப் பூஜை

சரித்திரப் பிரசித்தி பெற்ற துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சிறப்புமிக்க மார்கழி மாதப் பூஜை இன்று 16 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஜனவரி மாதம் 13-ம் திகதி வரையான மார்கழிமாதம் முழுவதும்தினமும் நடைபெறும். இம் மார்கழி மாதப் பூஜையில் விசேட பூஜையாக திருவனந்தல் பூஜை இடம்பெறும். (50)

## பருத்தித்துறையில் உதைப்பந்தாட்டம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 23-ம் திகதி கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய உத்தியோகத் தெரிவு நடைபெறும். அத்துடன் இக்கூட்டத்தையொட்டிக் காட்சி உதைப்பந்தாட்டப் போட்டி ஒன்றும் இடம்பெறும். (50)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிரான மலர்வு:

15 - 05 - 1971

நீசரால் மடிவு:

16 - 12 - 1989



### செல்வநாயகம் ரஞ்சித் டிலன்

(றாஜு)

''நாட்டிற்கும், வீட்டிற்கும் மாட்சிமை தந்திட்ட உன்னை, மானரோசமற்ற ஈனஜென்மங்கள் அழித்திட்டாலும், உன் நினைவால் என்றும் நெஞ்சம் நெகிழும், நேத்திரங்கள் நீர் சொரியும்''

குறிப்பு :- இவரின் ஆன்ம சாந்திக்காக 17-ம் திகதி காலை 6. 30 க்கு பண்டத்தரிப்பு பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

12091

## 60-ம் நாள் இதய அஞ்சலி

## போட்டோஸ்ரரற்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரரற் றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

காலை 9.00 மணி முதல் மாலை 4,00 மணிவரை

நெகிழும், நேத்திரங்கள் நீர் சொரியும்''

குறிப்பு :- இவரின் ஆன்ம சாந்திக்காக 17-ம் திகதி காலை 6. 30 க்கு பண்டத்தரிப்பு பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் 12091

பண்டத்தரிப்பு
16 - 12 - 1990

இங்ஙனம்
நண்பர்கள்

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி

### சொர்ணலிங்கம் டினேஸ்குமார்

(குட்டிக்கண்ணா)

தோற்றம்: 16 . 08 . 1986

மறைவு: 16 . 12 . 1987

இளமுருகன் வடிவில் வந்து உதித்து எம்குலக்கொழுந்தாய் வாழ்ந்து எங்களை எல்லாம் மகிழ்வுடன் வாழ வைத்து அழகான மழலை மொழிபேசி சற்றேனும் எதிர் பாராமல் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எம் அன்புச் செல்வமே. நீ குடியிருந்த தாய்வயிறும் உனை அணைத்த கைகளும் இன்று உணர்வின்றிக் கிடக்கின்றன. ஆண்டுகள் மூன்று ஓடிவிடினும் நீ எம்முடனே வாழும் நினைவுடனேயே இன்றும் நாம் வாழுகின்றோம்.

உன் ஆத்ம சாந்திக்கு வேண்டும்.

தாய், தந்தை, சகோதரிகள், அச்சாப்பா, அச்சாம்மா, (சதாசிவம் குடும்பத்தினர்) அப்பப்பா, அப்பம்மா, சண்டிலிப்பாய் கனகரத்தினம் குடும்பத்தினர், மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா மற்றும் உறவினர்கள்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

12092

## 60-ம் நாள் இதய அஞ்சலி

மலர்வு: 14 — 05 — 1963



அழிப்பு 18 — 10 — 1990

18-10-90 அன்று மல்லாகத்தில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சால் அகால மரணமடைந்த எமது அன்புக்குரிய நண்பன்,

### அமரர் சதாசிவம் விமலச்சந்திரன்

(விமல்)

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட நண்பா! தேறா நெஞ்சுடன் வாடுகின்றோம் உம்பிரிவால்! காலன் உம்மை விரைந்தழைப்பான் என்று நாங்கள் கனவு கூடக் காணவில்லை. இன்று நாம் கலங்குகிறோம் கண்ணீர் சிந்துகிறோம் - உம் பிரிவால் உம் நினைவுகள் எம் நெஞ்சில். என்றென்றும் நிலைத்து நிற்கும் ஜோதியாய் ஒளிவீசும்.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

நண்பர்கள்

12101

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.
காலை 9 . 00 மணி முதல் மாலை 4 , 00 மணிவரை

★ "ஸ்கைலைன்ஸ்" ★

281 B, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்,

★ 'SKYLINES' ★

281 B, Clock Tower Road, Jaffna.
(ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை)

12015

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம்
### யாழ்ப்பாணம் பெரும்பாகம்

1991 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ஆம் திகதி (20-12-1990) மு.ப. 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் தெரிய விரும்புவோர் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர். ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

சு. சே. பி. பணிமனை,
யாழ்ப்பாணம்.
10-12-1990.

12081

'மொஸாட்', 'எஸ். ரி. எப்', 'எஸ். ஏ. எஸ்', 'இனி மீனி'

# உலகளாவியபோர்த்தந்திரங்களை தனித்து நின்று எதிர்க்கும் நிலை

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஹிட்லர் யூதர்களைக் கொன்றதும் அதன் பின்னர் எதியோப்பியாவில் நிலவிய பஞ்சமும் உலகளாவிய ரீதியில் முக்கிய சம்பவங்களாகக் கருதப்பட்டுவருகின்றன.

ஆனால் ஹிட்லரின் படுகொலைகளை விட கொடிய சித்திரவதைகள் தென் தமிழீழத்தில் நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறு தென்தமிழீழதமிழர்களுக்கு ஆதரவாக வண்ணார் பண்ணைஐயனார் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டப் பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திருமலை பச்சைநூல் என்ற இடத்தில் அகதி முகாமில் இருந்த சிறுவர்கள் இராணுவத்தினரால் பலவந்தமாக கூட்டிச்செல்லப்பட்டு புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளின் மீது நடக்குமாறு பணிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

எதியோப்பியாவில் நிலவிய பட்டினியை விடக் கொடிய பட்டினி தென் தமிழீழத்தில் நிலவுகின்றது. மட்டக்களப்பு எழுவான் கரையில் 30,000க்கும் மேற்பட்ட மக்கள் முஸ்லிம் காடையர்களால் விரட்டப்பட்டுகாடுகளுக்குள் அடைமழையில்ஜீபரண்கள் அமைத்து தொல்லைகளின் மத்தியில் பட்டினியுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

1010 சதுரமைல் விஸ்தீரணத்தைக் கொண்ட தென் தமிழீழத்தில் 108 இராணுவ முகாம்கள் இருக்கின்றன.

அங்கு அரைமைலுக்கு ஒரு படை முகாம், ஐந்து நிமிடத்திற்கு ஒரு படைரோந்து, ஒரு நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு இடத்தில் சுற்றிவளைப்பு. களைப்பினால் மூச்சு விட்டாலே தாக்குதல்-இந்த துயர நிலை தான் காணப்படுகின்றது.

பாகிஸ்தானின் 'எஸ். ரி. எப்',இத்தாலியின்'கினிகினி', இங்கிலாந்தின் 'எஸ். ஏ. எஸ்', இஸ்ரேலின் 'மொஸாட்' இப்படியாக உலகெங்குமுள்ள பலம்வாய்ந்த இராணுவ ஸ்தாபனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட போர்த் தந்திரங்களை எதிர்த்தும் போராட வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் தற்போது உள்ளனர்.

1979-ம் ஆண்டு சூறாவளியினால் பாதிக்கப்பட்ட போது வட தமிழீழ மக்கள் வழங்கிய உதவிக்கு ஒத்த ஆதரவை தற்போது தென் தமிழீழ மக்கள் எதிர்பார்த்துள்ளனர். அவர்கள் எங்களை நம்புகிறார்கள். தமக்கு ஆதரவாக வடதமிழீழ மக்களின் ஆத்மீகபூர்வமான ஆதரவு என்றும் உண்டு என்ற நம்பிக்கையில் எதிரிகளின் தொல்லைகள் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு தமிழ் மண் காக்கும் ஒநபுனிதப் போரில் தென்தமிழீழ மக்கள் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஆஞ்சநேயர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தார். (74)

'லங்கா சிறி'

## வியாழன் திரும்பும்

பருத்தித்துறைக்கு வந்துள்ள 'லங்காசிறி'கப்பல் எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பு திரும்புமென எதிர்பார்க்கப்படுகிறது.

காலநிலை சீராக இல்லாவிட்டால் இக்கப்பல் இரண்டு ஒரு தினங்கள் தாமதம் ஆகலாம் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள தெரிவித்தனர்.

இக்கப்பலில் தபாற் பொதிகளும் ஏற்றிச் செல்லப்படவுள்ளன. (07)

## நல்லூரில் பொருட்காட்சி

நல்லூர் முருகன் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நல்லூர் ஆதீனம் கலாமண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

யாழ் மாநகர சபை ஆணையாளர்,பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றுவர்.

நண்பகல் அலங்காரப் பொருட்களின் காட்சியும் இடம்பெறும்.

# கேரதீவு - சங்குப்பிட்டி கடற்பாதை சேவையை மீண்டும் ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு தடை

கேரதீவு - சங்குப்பிட்டி மார்க்கத்தில் மீண்டும் கடற்பாதை சேவையை நடாத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி அரசாங்கத்தினால் தடுக்கப்பட்டுள்ளது.

இச்சேவைக்கென புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட கடற்பாதை சில மாதங்களுக்கு முன்னர் குண்டுவீச்சால் சேதமடைந்திருந்தது.

இக்கடற்பாதையை திருத்தி மீண்டும் சேவையிலீடுபடுத்த கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் முயற்சி எடுத்திருந்தார்.

ஆனால் கூட்டுப்படை தலைமையகம் இப்பாதையை திருத்துவதற்கோ அல்லது கேரதீவு - சங்குப்பிட்டி மார்க்கத்தில் மீண்டும் கடற்பாதை சேவை மேற்கொள்வதற்கோ தடைவிதித்துள்ளது

இதனால் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பாதைச் சேவையை மீண்டும் நடாத்த எடுத்த முயற்சி தடைப்பட்டுள்ளது. (35)

இப்போது இறால்சீசன்!

# பாவனையாளர் கொண்டாட்டம் மீன்பிடியாளர் திண்டாட்டம்

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு கடற்பகுதியில் இறால் பிடிபடும் சீசன் ஆரம்பமாகியுள்ளது

ஒவ்வொரு வருடமும் மார்கழி தொடக்கம் பங்குனி மாதம் வரை பெரும் தொகையான இறால் இப்பகுதிக் கடலில் பிடிக்கப்பட்டு அன்ரீஸ், சீபோன் ஸ்தாபனங்களில் பதப்படுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதன் மூலம் அரசுக்குப் பெரும் தொகையான அந்நிய செலவாணி கிடைத்ததுடன் கடற்றொழிலாளர்களும் பெருமளவில் வருமானத்தைப் பெற்ற

படகுகளின் ரோந்து காரணமாகவும் கடற்றொழிலாளர்கள்இறால் பிடிப்பதற்கு கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடபகுதியிலுள்ள பனிக்கட்டி ஆலைகள் அனைத்தும் சேதமடைந்துள்ளமையால் பிடிக்கும் இறால் பதனிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பொழுது இப்பகுதிகளில் கட்டுமரங்களில் கரைக்கு அண்மையில் சென்று பிடிக்கப்படும் இறால் ஒரு கிலோ ரூபா ஐம்பதாக சந்தையில் விற்கப்படுகிறது. முன்னைய வருடங்களில் நிலைமை சீராக இருந்த

மாங்குளம் என்றாலே சினம்

# ஒருவர் கொலை; மற்றவர் நெற்றியில் கத்திச் சின்னம்

வவுனியா பூந்தோட்ட இராணுவத் தடை முகாமில் மாங்குளத்தை வசிப்பிடமாகக்கொண்ட தேசிய அடையாள அட்டைகளை வைத்திருப்போர் மிகவும் கடுமையாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் வவுனியாவுக்குச் செல்ல முனைந்த மாங்குளம் வாசிகளில் ஒருவர் இத்தடை முகாமில் சோதனையின் போது சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொருவரின் உடல் மீது, சம்பந்தப்பட்ட இராணுவத்தினரின் றெஜிமென்ட் சின்னம் கிறிஸ் கத்தியால் வெட்டிக்கீறப்பட்டதாம், (50)

'ஏசியாவீக்'கருத்து

# இழப்புக்களை ஈடுசெய்வதற்கு தமிழ் மக்களுக்கு நீண்டகாலம்தேவை

கடந்த நான்கு மாதங்களாக இடம்பெற்ற போரில் குழந்தைகள் உட்பட 3000 பொதுமக்கள் பலியாகியுள்ள

இன்று பேராசிரியர் க. கைலாசபதி நினைவு கூரப்படுகிறார் - கம்பன் கோட்டத்தில். பேராசிரியரோடு யாழ் இந்துக்கல்லூரியில் கற்றவரும்,அவர்தம் இலக்கியச்சகாவுமாகிய கவிஞர் இ. முருகையன் எழுதிய இக்கட்டுரை பேராசிரியர் பற்றிய ஒரு நல்ல மதிப்பீடு.

# கைலாசபதி - வாழ்வும் எழுத்தும்

1948, 1949, 1950ஆம் ஆண்டுகளையொட்டிய காலப் பகுதியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விடுதிச் சாலையிலே தங்கியிருந்து கைலாசபதி கல்வி கற்று வந்தார். அதே காலத்தில் நானும் அதே கல்லூரி விடுதிச்சாலையிலே தங்கியிருந்து கற்று வந்தேன் நாம் இருவரும் ஒரே வகுப்பிலே படித்தோம். ஆனால் பிரிவுகள் வெவ்வேறு. அவர் கலை; நான் விஞ்ஞானம்.

அக்காலத்திலும் கைலாஸ் நகைச்சுவை உணர்வு மிக்கவராய் இருந்தார். ஆங்கில மொழிப் பரிச்சயமும் கணிசமான அளவு இருந்தது. தமிழார்வமும் நிறைய இருந்தது. தமது பிள்ளைப் பருவத்தை மலேசியாவிலே கழித்த ஒருவருக்கு அக்காலத்திலே தமிழார்வமோ, திறமையோ இருப்பது மிகவும் அபூர்வமாகும்.

இந்துக் கல்லூரியில் இருந்த காலத்திலே கைலாசபதி பலவகைத் தமிழ் நூல்களை வாசித்தார் அக்காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தார் எழுதி வெளியிட்ட சிறு சிறு நூல்கள், பள்ளி மாணவர் மத்தியிலே பிரபலமாயிருந்தன. 'கம்பரசம்', 'ஆரிய மாயை', 'தீ பரவட்டும்', 'நாடும் ஏடும்', 'நிலையும் நினைப்பும்', 'பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம்', 'பரந்தாமனுக்குப் பகிரங்கக் கடிதம்' என்பவற்றைக் கைலாசின் கைகளிலே கண்ட ஞாபகம் இப்பொழுது உள்ளது. திராவிட இயக்க ஏடுகளுடன், வேறும் பல நூல்களை அக்காலத்திலே வாசிக்கலானார். பாரதிதாசன், புதுமைப்பித்தன், ரகுநாதன், மு. வரதராசன், சுத்தானந்த பாரதி, ச. து. சு. யோகியார் முதலானோரின் படைப்புகளையும் படிப்பதுண்டு அத்துடன் சேக்கிழார், கம்பர், திருமூலர், வள்ளுவர் முதலிய படைத்தமிழாசிரியர்களின் படைப்புகளிலும் பயிற்சி உடையவரானார்.

பாடசாலையிலே வித்துவான் க. கார்த்திகேசு, பண்டிதர் க. செல்லத்துரை என்போர் கைலாசின் தமிழார்வத்தை வளர்த்து ஊக்குவதிற் பெரிதும் உதவினர். கொம்யூனிஸ்ட் மு. கார்த்திகேசன், ஏ. எஸ். கனகரத்தினம், அற்புதரத்தினம் ஆகிய ஆசிரியர்கள் அவருடைய கருத்துகள் வளம் பெறுவதற்குத் துணை நின்றனர்.

அப்பருவத்திலேயே கைலாசபதி கட்டுரைகள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். 'தமிழ்மணி' (தெல்லியூர் செ. நடராசாவை ஆசிரியராகக் கொண்டது) 'இந்துசாதனம்', 'சுரபி' போன்ற பத்திரிகைகளிலும், கல்லூரிஇலக்கிய மன்றப் பத்திரிகைகளிலும் அவை இடம்பெற்றன சமயச் சார்பும் இலக்கியச் சார்பும் அக்கட்டுரைகளிற் காணப்பட்டன

கைலாசைப் பொறுத்தவரையிலே, இந்துக் கல்லூரிக் காலகட்டம் எழுத்தார்வம் முளை கொண்ட பருவம் என வருணிப்பது பொருத்தமாகும்.

1956ஆம் ஆண்டில் கைலாசபதி றோயல் கல்லூரி மாணவர் ஆகிறார். அங்கு இவருடைய தமிழார்வத்துககு ஆசிரியர் இருவர் துணை நின்றனர். ஒருவர் நாவற்குழியூர் நடராசன் எனப்படும் க. செ. நடராசா. இவர் கவிஞர், பிற்காலத்தில இலங்கை வானொலி நிகழ்ச்சி அமைப்பாளராயிருந்தவர். மற்றையவர் கி. லக்ஷ்மண ஐயர். இவர் தத்துவ ஞானப் பயிற்சி உடையவர். பிற்காலததிலே இலங்கைக் கல்வித் திணைக்களத்திற் கல்விப்பணிப்பாளராய் இருந்தவர்.

றோயல் கல்லூரிக் காலத்தில், கைலாசபதியின் வாசிப்புப் பழக்கம் மிகவும் பரந்து விரிந்தது. பல துறை நூல்களையும் அவர் பயின்றார். ஆங்கில இலக்கிய விமர்சகர்களின் ஆக்கங்களை ஊக்கமாகக் கற்றார். ற்றி. எஸ். எலியற், எஃப். ஆர் லீவிஸ், சிசில் டேய் லூயி, ஸ்ற்றீஃபன் ஸ்பென்டர் முதலிய விமர்சகர்களும், டி. எச். லோறன்ஸ், பேணாட்ஷோ, ஜேம்ஸ் ஜோய்ஸ், வேஜினியா வூல்ஃப் முதலிய எழுத்தாளர்களும் கைலாசபதியினால் வாசிககப்பட்டனர். எனக்கு அவர் எழுதிய இலக்கியக் கடிதங்களின் வாயிலாகவும் நேரில் சந்திக்கையில் நிகழ்ந்த உரையாடலின்போதும் அவருடைய வாசிப்புப் பின்னணி புலனாகும் இங்கு கூறப்படாத இன்

வாணி கிடைத்ததுடன் கடற்றொழிலாளர்களும் பெருமளவில் வருமானத்தைப் பெற்றனர்

தற்போது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் கடலில் கடற்படை பீரங்கிப்

தையில் விற்கப்படுகிறது.

முன்னைய வருடங்களில் நிலைமை சீராக இருந்த வேளையில் ஒரு கிலோ இறால் ரூபா இருநூறு தொடக்கம் ரூபா இருநூற்றைம்பது வரை விலை போனது.

# ஆசிரியர் பற்றாக்குறை மீளத்தலைதூக்குகிறது

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தோன்றும் நிலை மீண்டும் ஏற்பட்டுளளது.

அரசின் ஒய்வு பெறுவோருக்கான சலுகைகளைப் பயன்படுத்தி பயிற்சி பெற்ற அனுபவம் வாய்நத பல ஆசிரியர்கள் ஒய்வு பெறவுள்ளதால் கல்வித் துறையில் பெரும் இடைவெளி ஒன்று தோன்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டிற்குப் பின்பு புதிய ஆசிரிய நியமனங்கள் செய்யப்படாமையினால் பலபாடசாலைகளில் ஏற்பட்ட ஆரம்ப வகுப்பு ஆசிரியர் வெற்றிடங்களினால் ஏற்பட்ட தாக்கம் அண்மைக் காலத்துப் பரீட்சை முடிவுகளில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களின் பெறுபேற்றில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் 1987 இன் பின்பு புதிய ஆசிரிய நியமனங்களினால் ஆசிரியப்பற்றாக்குறைப் பிரச்சினை நீக்கப்பட்டுவரும் நேரத்தில் மேலும் பல ஆசிரியர்கள் ஒய்வு பெறுவது பாடசாலைக்கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென கல்வியாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதும் இத்திட்டத்தின் கீழ் 10,000 ஆசிரியர்கள் ஒய்வு பெற விண்ணப்பித்துள்ளனர். (22)

கடந்த நான்கு மாதங்களாக இடம்பெற்ற போரில் வடஇலங்கையைச் சேர்ந்த ஒரு மில்லியன் மக்கள் தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக உள்ளனர்.

இதுவரை வயோதிபர்கள் குழந்தைகள் உட்பட 3000 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

வடஇலங்கை மக்கள் தமது இழப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

இவ்வாறு 'நெருப்புக் கண்ணீர்' என்ற தலைப்பில் 'ஏசியாவீக்' ஆங்கில சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள இலங்கை நிலைவரம் பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. (48)

## சிற்றூர்தி சங்கக் கூட்டம்

வடபிராந்திய சிற்றூர்தி (மினிபஸ்) சேவைச் சங்கங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் பஸ் உரிமையாளர்களின் கூட்டம் இன்று 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வயிற்றுளைவு

### வேகமாகப் பரவுகிறது

பளைப் பகுதியில் குழந்தைகளுக்கு வயிற்றுளைவு நோய் வேகமாகப் பரவி வருகிறது

வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகள் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ப-3)

## தொண்டர் ஆசிரியருக்கு

வடமராட்சிக் கோட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவாகியுள்ள தொண்டர் ஆசிரியர்கள், வசதிகள் சேவைகள் கட்டண ஆசிரியர்கள் அனைவரும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்கு 18-ம் திகதி காலை 9 மணிக்கு வந்து தத்தமது அனுமதி அட்டைகளைக் கோட்டக் கல்வி அதிகாரி பொ. வீரபத்திரனிடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது

நேர்முகப் பரீட்சை அனுமதி அட்டை பெற வருபவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டையையும் கட்டாயம் கொண்டு வரல் வேண்டும்.

திக்கையில் நிகழ்ந்த உரையாடலின்போதும் அவருடைய வாசிப்புப் பின்னணி புலனாகும் இங்கு கூறப்படாத இன்னும் எத்தனையோ நூலாசிரியரின் படைப்புகளை அவர் வாசித்திருந்தாரென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. என் நினைவுககு வந்த நூலாசிரியர் சிலரைக் கூறியுள்ளேன்; அவ்வளவுதான்!

இக்காலத்திலே கைலாசபதி ஒரு படைப்பாளியாகவும் தோற்றங் காட்டினார். கவிதைகள் சிலவற்றையும், சிறுகதைகள் சிலவற்றையும் அவர் ஆக்கினார் நாடகங்களும் எழுதினார். இவை வானொலியில் ஒலிபரப்பாயின 30, 40 நாடகங்களை இவர் எழுதினார் என ஒரு சமயம் இவரே சொல்லக் கேட்டிருக்கிறேன் ஷேக்ஸ்பியரின் 'ற்றெம்பெஸ்ற்' என்னும் நாடகத்தை வானொலிக்கெனத் தமிழாக்கி ஒரு தொடராக ஒலிபரப்பச் செய்துள்ளார் ஒருநத்தார்ப் பெருநாளையொட்டி 'கல்லறைக்கு எதிரில்' என ஒரு நாடகம் ஆக்கினார். புதுமைப்பித்தனின் 'கபாடபுரம்' கைலாசின் கையிலே ஒரு வானொலி நாடகமாயிற்று 'குரல்கள்' என்னும் மகுடமிட்ட வேறொரு நாடகம் ஒரு விதத்திலே பரிசோதனை முயற்சியாய் அமைந்தது.

இவ்விதம் படைப்பு முயற்சியில் இடையிடையே ஈடுபட்டாலும், தமது துறை விமரிசனமே என்பது வெகு விரைவிலே கைலாசபதக்குப் புலனாயிற்று. விமரிசனக் கட்டுரைகளையும் குறிப்புகளையும் அவர் அதிகமாக எழுதி வந்தார்.

இவ்வாறு அவர் விமரிசனத்துறையைத் தேர்ந்தெடுத்து அதில் மேம்பாடு பெறுவதற்கு, அவர் இலக்கியப் படைப்பாளியாகி நின்றுபெற்ற அனுபவமும் பெரிதும் உதவிற்றெனவே எனக்குத் தோன்றுகிறது.

றோயல் கல்லூரிக் காலகட்டம், கைலாசபதியின் இலக்கிய விமரிசனப் புலமை செழுமை பெற்று விரிந்த காலம் எனக் கொள்வது பொருத்தமாகும்.

அடுத்தது கைலாஸ் பல்கலைக்கழக மாணவராக இருந்த காலமாகும். பல்கலைக்கழக முதலாண்டுப் பரீட்சை முடிந்ததும் தமிழைச் சிறப்புப்பாடமாக எடுத்து பட்டப் படிப்பை மேற்கொண்டார். கைலாசபதி முதலாம் வகுப்பிற் சித்திய

—04ஆம் பக்கம் பார்க்க

## கைலாசபதி - வாழ்வும்....

டையும் அளவுக்கு அவருடைய கல்வி நிலை பிரகாசமாய் இருந்தது.

பல்கலைக்கழகத்தில், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பேராசிரியர் சு. வித்தியானந்தன் என்போருடன் ஏற்பட்ட தொடர்பு, கைலாசபதியின் இலக்கிய நோக்குடன் மேலும் புதிய பரிமாணங்களைச் சேர்த்தது. மரபு பற்றிய கருத்துக்களும், மரபுகளை நன்குணர்ந்து விளங்கிக்கொள்வதன் அவசியப்பாடும் அவருக்கு மேலும் மேலும் தெளிவாயின.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற் படித்துக் கொண்டிருந்த வேளையிலேதான் இவரது உடன் மாணாக்கராகிய கா. சிவத்தம்பியுடன் நெருக்கமான நட்பும் தொடர்புகளும் வலிமை பெற்றன. 'தவறான எண்ணம்' 'சுந்தரம் எங்கே'? ஆகிய மேடை நாடகங்களிலே சிவத்தம்பியும், கைலாசபதியும் நடித்துள்ளனர். (இவை பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையினால் இயற்றப்பட்டவை. சு. வித்தியானந்தனால் நெறியாளப்பட்டவை.)

நாடகங்களில் மட்டுமன்றி, மாணவர் மன்றக் கூட்டங்கள், விழாக்கள், விவாதங்கள் ஆகிய பலவற்றிலும் கைலாசபதி பங்குபற்றுவதுண்டு. இவற்றின் விளைவாக ஆய்வறிவு நோக்கும் விமரிசன மனப்பான்மையும் மேலும்மேலும் கூர்மை பெறலாயின.

பட்டப்படிப்பு முடிந்த பின்னர் சிலகாலம் 'தினகரன்' ஆசிரியராக அமர்ந்து விட்டு. மீண்டும் பல்கலைக்கழகஞ் சென்று அங்கு விரிவுரையாளராய் நியமனம் பெற்றார். தமது எம். ஏ. பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

பத்திரிகை ஆசிரியராய் இருந்த காலத்திலும் அதற்குச் சற்று முன்னும் பின்னும் அவர் இலங்கையிலுள்ள எழுத்தாளர் பலருடனும் மிகவும் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். இலங்கை எழுத்தாளர் மத்தியிலே புதியதோர் எழுச்சி உண்டாவதற்குத் துணை நின்றார். இதற்கு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இயக்கம் பெரிதும் உதவிற்று. பிரேம்ஜீ, சிவத்தம்பி, எச். எம். பி. கொதீன், இளங்கீரன், அ. ந. கந்தசாமி, சில்லையூர் செல்வராசன், செ. கணேசலிங்கன் என்போருடன் இணைந்து நின்று பலவிதத் திட்டங்களையும் ஆலோசனைகளையும் கொள்கைளையும் முன்வைப்பதில் கைலாசபதிஊக்கமாக உழைத்தார் இந்த வகையிலே சங்கத்தின் அச்சாணி போல அவர் செயற்பட்டார் என்றால் அது மிகை ஆகாது.

இலங்கைத் தமிழர்க்கெனத் தனியான தன்மைகளும் அக்கறைகளும் உள்ளன: பிரச்சினையிலும் பின்னணியிலும் தனி இயல்புகள் உண்டு. ஆகையால் தேசியச் சார்பு இலக்கியத்திலும் பிரதிபலிக்கும்; சமூகப் பண்புகளையும், வரலாற்றையும் நிகழ்காலச் சூழலையும் ஒட்டியே உயிர்ப்புள்ள இலக்கியங்கள் பிறப்பெடுக்கும், அவையே சிறப்பானவை; பாராட்டப்பட வேண்டியவை — இவ்வாறான எண்ணங்களை மக்களிடையே விதைப்பதில் முற்போக்கெழுத்தாளர் சங்கம் முன்னின்றது. கைலாசபதி சங்க மூலவர்களிலே முக்கியமானவர். இந்த வகையிலே கைலாசபதி ஒரு சக்தியாகப் பரிணமித்தார். இங்குள்ள எழுத்தாளர் அனைவரும் தமது படைப்புக்கள் பற்றி, கைலாசபதி என்ன நினைக்கிறார் என அறிவதிலே பெரும் ஆர்வங்காட்டினர். இதன் விளைவாக, நேரடியாகவும், மறைமுகமாகவும் இலங்கை எழுத்தாக்கங்களின் திசையை நிர்ணயிக்கும் பணியையும் கைலாசபதி மிகவும் நுணுக்கமாகச் செய்து வந்தார் எனில் பிழை ஆகாது.

எம். ஏ. பட்டம் நிறைவெய்தியபின் பேமிங்காம பல்கலைக்கழகம் சென்று பி. எச். டி. பட்டத்துக்கென 'வீரயுகத் தமிழ்க்கவிதை' பற்றி ஆராய்ந்தார். பட்டம் பெற்ற பின்னர் மீண்டும் இலங்கைக்கு வந்து தமிழ்த்துறையிலே சேர்ந்து தமது பல்கலைக்கழக நிலைப்பட்ட பணிகளைத் தொடர்ந்தார்.

இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு யாழ்ப்பாணத்தில் வளாகமொன்று நிறுவப்படல் வேண்டுமென முடிவு செய்யப்பட்ட காலத்தில், கலாநிதி கைலாசபதியிடமே தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. அக்காலத்திற் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் இவர் அரும்பாடு பட்டு, யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழக வளாகத்தினைத் தோற்றுவிப்பதிலே பெரும் பங்களிப்புச் செய்தார். இன்று அந்த நிறுவனம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக பரந்து விரிந்து கொண்டிருக்கிறது:

கைலாசபதி ஆற்றிய அறிவுப்பணிகள் பன்முகப்பட்டவை. வானொலி, விரிவுரைகள், கருத்தரங்குகள், மாநாடுகள், கலந்துரையாடல்கள் என்பவை மூலம் பணியாற்றினார்

# கல்வி முகாமைத்துவப் பிரிவு யாழ் மாவட்டத்தில் செயற்பட முடியாத நிலையில் உள்ளது

கல்வி அமைச்சு நாட்டின் கல்வி முகாமைத்துவ விருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கல்வி அபிவிருத்தியை மேற் கொள்ள விருக்கின்றது. இது சம்பந்தமாக நாடுபூராவும் மாவட்டரீதியாக முகாமைத்துவ விருத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் கல்வி முகாமைத்துவச் செயற்பாடுகள் சரியான முறையில் செயற்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக அறியவந்துள்ளது.

கல்வி முகாமைத்துவ நிலையம் அமைப்பதற்காக ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் பயன்படுத்தப்படாத நிலையில் அறையில்வைக்கப்பட்டுள்ளன.

இதற்காக ஒரு கட்டடமும் தெரிவாகி, இதற்குப் பொறுப்பாக ஒரு கல்வி அதிகாரியும் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் நியமிக்கப்பட்டிருந்தும் அவை செயற்படுத்தப்படாமலும் செயற்பட முடியாமலும் இருக்கின்றது.

இதற்காக கல்வி அமைச்சால் ஒதுக்கப்பட்ட நிதி கூட இவ்வருடம் முடிவடைவதால் திரும்பிச் செல்லும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

வளர்ந்த, வளர்ந்து வரும் நாடுகளின் கல்வி முகாமைத்துவத் துறையின் முக்கியத்துவம் உணரப்பட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதால் கல்வி அமைச்சும் இதற்கான முக்கியத்துவத்தை யளித்து காலி, கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு. திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் முகாமைத்துவ நிலையத்தை ஏற்படுத்தியது.

மகரகமாவில் உள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் உள்ள கல்வி நிர்வாகப் பயிற்சி நிலையத்தில் 16 சிங்கள, 4 முஸ்லிம், 2 தமிழ் அதிகாரிகளைப் பயிற்றுவித்து அவ்விடங்களுக்கு நியமித்துள்ளது

இம் முகாமைத்துவ நெறி சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டால் பாடசாலைக் கல்வி அபிவிருத்தி பாடசாலை நிருவாக அபிவிருத்தி என்பன மூலம் பாடசாலைகளில் முகாமைத்துவம், பாடத்திடமிடல், மதிப்பீடு என்பனவைற்றில் நல்ல பெறுபேறுகள் கிடைத்திருக்குமென நம்பப்படுகின்றது.

## 300 ரூபா சம்பள உயர்வு கோரி தோட்டங்களில் வேலை நிறுத்தம்

மூந்நூறு ரூபா சம்பள உயர்வு கோரி தோட்டங்களில் பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ள தோட்டத் தொழிலாளர் கூட்டுக் கமிட்டி ஆலோசித்து வருகிறது.

அரச ஊழியர்களுக்கு 300 ரூபா சம்பள உயர்வு வழங்கிய அரசு தோட்டத் தொழிலாளருக்கு இதனை வழங்க முன்வராதது அநீதியான செயல் என்று மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது என்றும் அதற்குச் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் இந்தப் பொது வேலை நிறுத்தம் தோட்டங்களில் இடம்பெறும் என தோட்டத் தொழிலாளர் கூட்டுக்கமிட்டி அமைப்பாளர் எஸ். நடேசன் தெரிவித்துள்ளார். (33)

## கொழும்புத் தபால்கள் நேற்று இங்கு விநியோகம்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு கப்பலில் வந்த யாழ் குடாநாட்டுத் தபாற் பொதிகள் யாழ்பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டதையடுத்து நேற்று குடாநாட்டுத் தபாலகங்களுக்குரிய தபாற் பொதிகள் பல தபாலகங்களைச் சேர்ந்த ஊழியர்களால் எடுத்துச் செல்லப் பட்டது.

இதே வேளை யாழ் பிரதம தபாலகத்தில் வைத்து எவருக்கும் தபால்கள் விநியோகிக்கப்பட மாட்டாதென்றும் தபால் சேவகர்களால் வழமைபோல் வீடுகளுக்குச் சென்று தபால் விநியோகிக்கப்படுமென்றும் எவரும் தபாலகம் வந்து வீணாக அலையத் தேவையில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## நல்லெண்ணெய் உற்பத்தி குறித்து முக்கிய கருத்தரங்கு

நல்லெண்ணெய் உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோர் ஆகியோருக்கான முக்கிய கருத்தரங்குஒன்று பிரான்பற்று சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் எதிர் வரும் 17-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுகாதார திணைக்களமும், உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இக்கருத்தரங்கில் யாழ் மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வார்கள்.

நல்லெண்ணெய் தயாரிப்பாளர்கள், அதனை விற்பவர்கள் ஆகியோரை தவறாது இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (13)

## வீரமரணம்

நேற்று முன்தினம் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விஜி (சுப்பிரமணியம் விசுவநாதன், திருவையாறு, கிளிநொச்சி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

ராணுவ...

களில் பணிபுரிய டாக்டர்கள்

## 2-ம் வார விசேட நிவாரணம் 19-ம் திகதி முதல் ஆரம்பமாகும்

இரண்டாம் வாரத்திற்கான விசேட இலவச உலர் உணவு இம் மாதம் 19-ம் திகதி புதன்கிழமை முதல் சகலருக்கும் வழங்கப்படும்

பருத்தித்துறை துறைமுகத்தில் சப்பலில் இருந்து பொருட்களை இறக்குவதில் உள்ள தாமதத்தால் விசேட உலர் உணவு விநியோகம் தாமதமாகின்றது என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (66)

## விவசாய பீடத்திற்கு 17 மாணவரே பதிவு செய்தனர்

கிளிநொச்சியில் இயங்கும் யாழ் பல்கலைக் கழக விவசாய பீடத்தின் முதலாம் வருடத்திற்கு 26 மாணவர்களிற்கு இடம் ஒதுக்கப்பட்ட போதும் இதுவரை 17 மாணவர்களே பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக் சழக பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இம் மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் தற்பொழுது விவசாய பீட விரிவுரைகளுக்கு சமுசமளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு புதிய மாணவர்களை தெரிவு செய்யும்படி பல்கலைக் சழக மானிய ஆணைக் குழுவை யாழ் பல்கலைக்

## மோசடி கண்டுபிடிப்பு

## 20 லட்சம் ரூபா மா மூடைகளை எலி, கறையான் உண்டதாம்

எலிகளிலும், சறையான் தோட்ட உணவுக் களஞ்சி

..., கருத்தரங்குகள், மாநாடுகள், கலந்துரையாடல்கள் என்பவை மூலம் பணியாற்றினார். அவ்வளவில் நில்லாது, எழுத்தாளர்களுக்கும், ஆய்வாளருக்கும் ஆலோசனை கூறுதலும் அவரது முக்கிய பணிகளுள் ஒன்றாயிற்று.

இவை தவிர, கைலாசபதியின் நூலாக்கங்களும், வெளியீடுகளும் அவரது கலாசாரப் பங்களிப்பின் அழியாத பதிவுகளாக நிலைபெற்றுள்ளன.

இவருடைய நூல்களிற் சில வரலாற்றுத் தன்மை பெற்றவை. 'தமிழ் நாவல் இலக்கியம்' 'இரு மகாகவிகள்' ஆகியவை அப்படிப்பட்டவை.

சில நூல்கள் இலக்கிய வரலாற்றையும் சமூக வரலாற்றையும் இணைவுபடுத்திக் காட்டுவன. 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்', 'ஒப்பியல் இலக்கியம்' என்பன அவ்வாறமையும்.

'ஒப்பியல் இலக்கியத்திலும்' 'வீரயுகத் தமிழ்க் கவிதையிலும்' பிறநாட்டு, பிறமொழி இலக்கியங்களோடும் தமிழினை ஒப்பிட்டுக் காட்டும் இயல்பு உண்டு.

'அடியும் முடியும்' என்னும் நூலில், எண்ணக் கருக்கள் சிலவற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் தேடிக் காணும் முயற்சி இடம் பெறுகிறது. கடவுள் வாழ்த்து, பெண்மை (கற்பு), சாதி போன்ற எண்ணக்கருக்கள் பல்வேறு இலக்கியப் படைப்புகளில் இடம்பெறும் பான்மையை இந்த நூல் காட்டுகிறது.

'கவிதை நயம்', 'இலக்கியமும் திறனாய்வும்' என்னும் நூல்களில், இலக்கிய விமர்சனக் கோட்பாடுகளும் இலக்கியக் கொள்கைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

இன்னும் கைலாசபதி அவர்கள் பல்வேறு எழுத்தாளர்களுக்கு வழங்கிய நூல் முன்னுரைகளும் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளும் மனங்கொள்ளத் தக்கன. இவையெல்லாம் நூலுருப்பெற்றால் கைலாசபதியை முழுமையாகவும் முறையாகவும் மதிப்பிட வழி பிறக்கும்.

நன்றி—மலலிகை

களில் பணிபுரிய டாக்டர்கள் தயக்கம் காட்டுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்

## ஒரு போதும்

திட்டமிட்ட வெற்றியில் அல்ல திட்டமிட்ட அழிவில் தான் உங்கள் கவனம் உள்ளது.

மக்களை அழிக்கத் திட்டமிடாதீர்கள். வாழவைக்கத் திட்டமிடுங்கள்.

வடக்கில் தொடர்ந்து ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்கிறீர்கள். ஆனால் மாத்தறை, காலி பகுதிகளில் இப்படித் தொடர்ந்து பல நாட்கள் ஊரடங்குச் சட்டத்தைப் போடுவீர்களா என்றார்.

மாவை சேனாதிராஜா எம்.பி பேசுகையில்; மக்கள் வெளியேறிய பின்னர் வெறிச்சோடியுள்ள வீடுகள் மீதும் விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (εε 11)

எலிகளிலும், சறையான்களிலும் பழியைப் போட்டு பன்தர் சோதனை பாவில் மோசடி செய்தது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

கண்டி, கட்டுக்கலை

## பொம்மர்..

ஹெலிகப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தப்பட்டதில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சுபேஸ்கரன் (20) கு. தவமணி (49) ஆகியோர் காயமடைந்தனர். (71,12)

## மத்திய...

முதல்வர் கருணாநிதி மறுத்துள்ளார். அன்றும் சரி இன்றும் சரி தமிழகம், மத்திய அரசின் ஆலோசனைகளைப் பெற்றே வருகிறது'' என்றார்.

## மகாவலி...

சிக்க வைக்க தீவிரவாதிகள் மேற்கொண்ட முயற்சி கைகூடாமல் போகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகின்றது. (11)

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 16-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

தோட்டட உணவுக் களஞ்சியத்தில் இந்த மோசடி நடந்தது. உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான பா மோசடி செய்யப்பட்டிருக்கிறது.

பா மூடைகளை எலிகளும் சறையான்களும் அரித்துவிட்டன அதனால் மா பாவனைக்கு உதவாது ஆகிவிட்டது எனக் கூறி பா மூடைகள் லொறிகளில் ஏற்றி அனுப்பப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (33 11)

## மக்கள்...

ஒவ்வொரு தமிழ் இளைஞனையும் பாதித்தது, இதைக் கவனத்தில் எடுக்காத ஜே. ஆர். தெற்கில் உள்ள தமது எதிரிகளை ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அப்போது பிரதமராக இருந்த பிரேமதாஸ ஜே.வி.பியின் பயங்கரவாதத்தால் மக்கள் வாக்களிக்க அஞ்சியிருந்த சூழ்நிலையில் எதிர் பாராதவிதமாக ஜனாதிபதியானார்.

அரசியல் நீரோட்டத்தில் ஜேவிபிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அவர் விடுத்த அழைப்பு பயன்தரவில்லை.

கழக மானிய ஆணைக்குழுவை யாழ் பல்கலைக் கழகம் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

## வளைகுடா...

தடையினால் ஸ்ரீலங்காவுக்கு ஏற்டுப் இழப்பு 80 கோடி ரூபாவாகும். முக்கிய செலவினங்களை பொறுத்தவரை ஜனசக்தி திட்டத்தின் முதற் கட்டத்துக்கு 2.5 பில்லியன் ரூபாவும் பாடசாலைப் பிள்ளைகளின் மதியஉணவுக்கு 2பில்லியன் ரூபாவும் தேவைப் படுகிறது.

தற்போதைய சூழ் நிலையில் இலங்கையின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் பேண வேண்டுமாயின் சமஷ்டி அமைப்புக்கு குறைவாக எதுவும் பயனளிக்காது.

இலங்கையைப் பிடித்த காலக்கேடு என்னவென்றால் மக்களுடைய அவலத்தையும், துன்பத்தையும், அழிவையும் உணராத சிலர் அரசியற் பீடத்தில் பாதுகாப்பாக இருந்துகொண்டு உல்லாசப் பயணிகளால் நிரம்பி வழியும் கொழும்பு ஹோட்டல்களையும், அங்கு பரிமாறப் படும் குடி வகைகளிலும், சங்கீதத்திலும் மயங்கிக் கிடப்பதுதான்.